## Copy of Deposition

### சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

MC OP No. 06 /2024

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 10.11.2025ம் நாளாகிய இன்று **திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்.,** அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தா.இன்னோசென்ட் | தொழில் | : மருத்துவர், பரணி பாவேந்தன் பலதுறை மருத்துவமனை |
| த/பெ.பெயர் | : தாமஸ் | கிராமம் | : |
| வயது | : 53 | மாவட்டம் | : |

**ம.த.சா:2**

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் 3ம் நபர் . மனுதாரர் தரப்பு 2ம் சாட்சி. மனுதாரர் சரஸ்வதி என்ன காரணத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் கடந்த 02.02.2023ம் தேதி அன்று மாலை 4.00 மணிக்கு நடந்து சென்றுகொண்டிருந்போது நான்கு சக்கர வாகனம் மோதி விபத்திற்குள்ளாகி கொடுமுடி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்ற பின்னர் செந்தில் எமர்ஜென்சி கேர் மருத்துவமனை, கரூரில் முதலுதவி சிகிச்சை பெற்ற பின் மேல்சிகிச்சைக்காக அன்று இரவு 11.40 மணிக்கு எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன.

1) வலியுடன் கூடிய வீக்கம் இடது கணுக்காலில் இருந்தது. ஊடுகதிர் படம் எடுத்ததில் இடது கணுக்காலில் medial mellelous என்ற எலும்பு முறிவு இருந்தது.

2.வலியுடன் கூடிய வீக்கம் இடது கணுக்காலில் இருந்தது. ஊடுகதிர் படம் எடுத்ததில் இடது கணுக்காலில் lateral mellelous என்ற எலும்பு முறிவு இருந்தது.

3. வலியுடன் கூடிய வீக்கம் இடுப்பு பகுதியில் இருந்தது. CT Scan எடுத்து பார்த்ததில் வலதுபுறம் superior and inferior pubic rami fracture இருந்தது.

4. வலியுடன் கூடிய வீக்கம் இடுப்பு பகுதியில் இருந்தது. CT Scan எடுத்து பார்த்ததில்

இடது புறம் superior and inferior pubic rami fracture இருந்தது.

5. வலியுடன் கூடிய வீக்கம் இடுப்பு பகுதியில் இருந்தது. CT Scan எடுத்து பார்த்ததில் anterior column of acetabulam என்ற இடுப்பு மூட்டின் கிண்ணப்பகுதி உடைந்திருந்ததது.

6. வலியுடன் கூடிய வீக்கம் நடுமுதுகின் பின் பகுதியில் இருந்தது. CT Scan எடுத்து பார்த்ததில் நடு முதுகு எலும்பில் sacrum என்ற எலும்பு முறிவு இருந்தது.

7.வலியுடன் கூடிய வீக்கம் நடுமுதுகின் பின் பகுதியில் இருந்தது. CT Scan எடுத்து பார்த்ததில் நடு முதுகு எலும்பில் coccyx என்ற எலும்பு முறிவு விலகி இருந்தது.

8.வலியுடன் கூடிய வீக்கம் நடுமுதுகின் பின் பகுதியில் இருந்தது. CT Scan எடுத்து பார்த்ததில் நடு முதுகு எலும்பில் sacrum, S2 என்ற எலும்பு முறிவு இருந்தது.

9.திறந்த காயம் 6 x 3செ.மீ, 2 x 1 செ.மீ வலது முழங்கையில் இருந்தது.

10.திறந்த காயம் 4 x 3செ.மீ, 4 x .5 செ.மீ வலது மேற்கையின் கீழேயும், சிராய்ப்பு காயமும் இருந்தது.

11. சிராய்ப்பு காயம் 1 x 1செ.மீ வலது கணுக்காலில் இருந்தது.

12. சிராய்ப்பு காயம் 4 x 1செ.மீ வலது நெற்றியில் இருந்தது.

மேற்கண்ட காயங்களில் 1 முதல் 8 வரை கொடுங்காயங்கள் என்றும், 9 முதல் 12 வரை சாதாரண காயங்கள் என்றும் காயச்சான்று கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ. 5 காயச்சான்று நான் வழங்கியதுதான்.** மேற்கண்ட காயங்களில் என்னென்ன காயங்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு என்ன மாதிரியான உலோகத்தகடுகள் பொறுத்தப்பட்டது என்றால் இடது கணுக்காலில் medial mallelous என்ற எலும்பிற்கு K wire, tension band wiring என்ற அறுவை சிசிக்சையும் lateral mallelous என்ற எலும்பிற்கு screw வைத்து அறுவை சிகிச்சையும் இடுப்பு மூட்டு, pubic rami fractureக்கு plate and screws வைத்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மனுதாரருக்கு 3 முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மனுதாரருக்கு வைக்கப்பட்ட உலோகத்தகடுகள்

## Copy of Deposition

அனைத்தும் தற்போது வரை அகற்றப்படவில்லை. மேலும் இதற்கு பொதுவாக அறுவை சிகிச்சை முடிந்து 2 வருடங்களுக்கு பின்னர் இதனை அறுவை சிகிச்சை மூலம் உலோக தகடுகளை அகற்ற வேண்டும். மனுதாரருக்கு மேற்படி எதிர்கால அறுவை சிகிச்சைக்கு சுமார் ரூ.1,25,000/- செலவாகும். ம.சா.ஆ.9 பரணி பலதுறை மருத்துவமனையில் மனுதாரர் செலுத்திய மருத்துவமனை கட்டணங்கள் மற்றும் மருந்து கட்டணங்களுக்கான ரசீதுகள். மனுதாரர்தான் ம.சா.ஆ.9ல் கண்ட கட்டணங்களை மருத்துவமனைக்கு செலுத்தியுள்ளார். மனுதாரர் வேறு மருத்துவ காப்பீடு வழியாக மேற்படி மருத்துவ கட்டணங்களுக்கு மருத்துவமனையில் எவ்வித கோரிக்கையும் செய்யவில்லை.

குறுக்கு விசாரணை(3ம் எதிர் மனுதாரர் தரப்பில்):-

மனுதாரக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் தற்போது குணமாகிவிட்டதா என்றால் இடுப்பு பகுதியில் மட்டும் தற்போது வரை வலி உள்ளது. மனுதாரருக்கு மேற்கொண்டு அறுவை சிகிச்சை செய்ய அவசியம் உள்ளதா என்றால் ஆம். இடுப்பில் வலி உள்ளதால் உலோக தகடுகளை அகற்றுவதற்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். ம.சா.ஆ.9 மருத்துவ கட்டணங்கள் மற்றும் மருந்து கட்டணங்களை எங்கள் மருத்துவமனையில் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்காக மிகைப்படுத்தி வழங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு எதிர்காலத்தில் எவ்வித சிகிச்சையும் செய்வதற்கு அவசியம் ஏற்படவில்லை என்றாலும், நஷ்ட ஈடு அதிகம் பெற வேண்டும் என்பதற்காக எதிர்காலத்தில் சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம் என்று மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-இல்லை**

Taken down by me in Open Court read over to the witness and acknowledge by

Interpreted
Him / Her To Be Correct

P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.11.10 16:13:08 +0200

Subordinate Judge,
Kodumudi

**Copy of Deposition**